# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | மதுரை | காலம் : | 08/03/2023 | முதல் | 12/03/2023 |
| அறிக்கை எண் : | 019/ 2023 | வெளியீட்டு நாள் : | 07/03/2023 | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 18°-23° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (02.03.2023 முதல் 06.03.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 12-03-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 02/03 | 03/03 | 04/03 | 05/03 | 06/03 | தேதி | நாள்-5 08/03 | நாள்-5 09/03 | நாள்-5 10/03 | நாள்-5 11/03 | நாள்-5 12/03 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 3 | 0 |
| 35 | 35 | 35 | 36 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 36 | 37 | 37 | 37 |
| 23 | 18 | 22 | 23 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 22 | 22 | 23 | 23 |
| 4 | 2 | 3 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 2 | 0 | 0 | 0 | 0 |
| 70 | 54 | 69 | 67 | 73 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 39 | 34 | 40 | 45 | 32 | | 30 | 30 | 30 | 30 | 30 |
| 12 | 9 | 13 | 7 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 4 | 6 | 6 |
| வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | **காற்றின் திசை** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** |

**குறுஞ்செய்தி** :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மார்ச் 11 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 36°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 4 முதல் 6 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

வெப்பத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்க தினமும் போதுமான அளவில் தாதுக் கலவையினை கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும். குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக் கலவையினை கொடுப்பது மிகவும் அவசியமாகும். பகல் நேரங்களில் மாட்டு கொட்டகைகளின் பக்கவாட்டில் ஈரமான சணல் சாக்குககளை கட்டி விடவும். கால்நடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 முதல் 100 லிட்டர் தண்ணீரை 4 தவணையாக பகிர்ந்து கொடுக்கவும்.

*கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடைகாலங்களில் ஏற்படும் தீவனப்பயிர் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள்* 10 *சதவீத நிலத்தில்* கம்பு நேப்பியர் தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மிளகாய், வாழை,** காலநடை.

**மிளகாய்:**

- மிளகாய் பயிரில் பூக்கள், பிஞ்சுகள் உதிர்வதைத் தடுக்கவும், பூக்கள் விடுவதைத் தூண்டவும் நட்ட 60 அல்லது விதைத்த 100 வது நாளில் ஒரு முறையும்,
- மேலும் 30 நாட்களுக்குப் பிறகு இரண்டாவது முறையும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி கிராம் வளர்ச்சி ஊக்கி (என்ஏஏ) என்ற அளவில் கலந்து கைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

**வாழை:**

- வாழைப் பயிரில் தண்டுக் கூன்வண்டு கட்டுப்படுத்த, ஒரு ஏக்கருக்கு 2 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சிப் பொறிகளை வைத்து தண்டுக் கூன்வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

கால்நடை:

- நிலவும் வெப்பமான பருவசூழ்நிலையில் கால்நடைகளுக்கு சுவாசக்கோளாறு, வாய்வழியாக சளி வெளியேற்றம் போன்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.
- இவற்றிலிருந்து விவசாயிகள் தங்களின் மாடுகளை பாதுகாக்க கருப்பட்டி, வெங்காயம், சீரகம் இவை மூன்றிலும் சமஅளவு எடுத்து உரலில் ஆட்டி உருண்டையாக உருட்டி, காலை மாலை என இருவேளைகளிலும் கொடுக்க வேண்டும்.